# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.558/2023

Deposition of Witness for L.W.10 / P.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுந்தரராஜன் | | | |
| Father's Name | : | பெரியசாமி | Occupation | : | உதவி ஆய்வாளர் (ஓய்பு) |
| Village | : | | | | |
| District | : | ஈரோடு | Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.**2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, தற்போது பணி ஓய்வு பெற்று, ஈரோட்டில் வசித்து வருகிறேன். நான் ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, கடந்த 27.06.2014 ஆம் தேதி அன்று, நான் நிலை அலுவலில் இருந்தபோது, ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பாதூர் நிஷா என்பவரது அசால்ட் இன்டிமேஷனைப் பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று பாதூர் நிஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிறைய குற்ற எண்.487/ 2017, சட்டப்பிரிவுகள் 294(b), 323 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் மாண்புமி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், ஒரு நகலை விசாரணைக்காக நிறைய உதவி ஆய்வாளர் மதிவாணன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்னவாறு, சொன்ன மாதிரி, சொன்ன தேதி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், புகார் பெறப்படவில்லை, அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.